# தென்னம்பாக்கம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ பெருமாள் திருக்கோயில் வரலாறு

புண்ணிய பூமி, வேதபுரம் என்று பலவாறாகப் போற்றி புகழப்பெற்றதும் பாண்டிச்சேரிக்கு அருகில் அமைந்து இருப்பதும் **“வேதபுரியில் ஒரு திருமணஞ்சேரி”** என்று விளங்குகின்றதுமான தென்னம்பாக்கம் பசுமையான வயல்வெளிகளாலும் சோலைகளாலும் சூழப்பெற்று இயற்கைவளம் கொழிக்கும் ஒரு திருஷேத்திரம். ஆம்! **“தென்னம்பாக்கம், திருஷேத்திரம் மட்டும் அல்ல. அது ஒரு திவ்ய ஷேத்திரம்”** திருவுக்கு திருவானவன், அருவமாய் உருவமாய் எங்கும் நிறைந்திருக்கும் அந்த பரம்பொருளே, தன் திருவுள்ளபடி திருக்குடில் கொண்டு ஸ்ரீதேவி பூதேவி சமேதாவாக எழுந்தருளி, **ஸ்ரீ கல்யாண வேங்கடேஸனாய்** சேவை சாதிப்பதோடு மட்டுமல்லாமல் பக்தர்கள் வேண்டும் வரங்களையெல்லாம் தந்தருள்வதில் கலியுக வரதராஜனாகவும் விளங்குகின்றான்.

மேலும், இத்திருத்தலத்தில் மாதந்தோறும் வருகின்ற திருவோண நட்சத்திரன்று **ஸ்ரீகல்யாண வேங்கடஸ பெருமாளுக்கு** திருமஞ்சனம் செய்து சேவித்தால் தடைப்பட்ட திருமணங்கள் கைகூடுகிறது, திருமண தோஷங்கள் நிவர்த்தி ஆகின்றது, குழந்தை பாக்கியம் கிடைக்கின்றது. இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீசுதர்சனர் என்கிற சக்கரத்தாழ்வாருக்கும், யோக நரசிம்மருக்கும்** சித்திரை, சுவாதி நட்சத்திரங்களிலும், ஏகாதசி அன்றும் அபிசேஷக ஆராதனைகள் செய்து வணங்கினால் பலநாள் தீராத கோர்ட் விஷயங்கள் நல்லபடியாக முடிகின்றது, சித்த பிரமை உள்ளவர்களுக்கு சுகம் உண்டாகுகிறது, பில்லி, சூன்யம், மாந்திரீக உபாதைகள் நீங்குகிறது. இவ்வாலயத்தில் ஆஞ்சநேயர் ஸ்ரீகரிய சித்தி ஹனுமன் என்ற திருநாமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்.

**குறிப்பு : இந்த ஆலயம் உருவாவதற்கு காரணம் ஓலைச்சுவடி (நாடிசோதிடம்) (திருமூலர் நாடி, பிருகு நாடி, அகஸ்தியர் நாடி, வசிஸ்டர் நாடி) அனைத்து நாடிகளிலும் எம்பெருமான் ஸ்ரீமன்நாராயணன் இந்த கலியுகத்தில ஸ்ரீதேவி பூதேவி சமேதரராக ஸ்ரீகல்யாண வேங்கடேஸப் பெருமாள் திருக்கோலத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கவேண்டும் என்று அனைத்து நாடிகளிலும் ரிஷிகளின் வாக்கியமாக எழுதப்பட்டு இருந்தது. அதன்படி இந்த ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயத்திற்கும் பறவைகளின் சரணலாயம் என்று அழைக்கப்படும்.**

**வேடந்தாங்கலுக்கும், ஸ்ரீராமேஸ்வரம் என்ற புனித ஸ்தலத்திற்கும் தொடர்பு உள்ளதாக ரிஷிகள் எழுதி வைத்துள்ளார்கள். வேடுவ உருவம் கொண்டு பகவான் ஸ்ரீமன் நாராயணன் கிருதயுகத்தில் ஸ்ரீராம அவதாரத்திற்கு முன்பு வேடுவ உருவம் கொண்டு இரவு முழுவதும் தங்கிய வனம் தான் இந்த கலியுகத்தில் வேடந்தாங்கல் என்று அழைக்கப்படுகிறது. இதனை பறவைகள் சரணாலயம் என்றும் அழைக்கப்படுகிறது. காரணம் அகஸ்தியர் மாமுனிவரால் சாபம் பெற்ற முனிவர்மார்கள் அனைவரும் தங்களுடைய சாபம் நீங்குவதற்காக வேடந்தாங்கல் என்ற வனத்தில் உள்ள ஆலமரத்திற்கு சென்று சரணடைந்து சாபம் விமோசனம் பெற்றதால் இந்த கலியுகத்தில் அந்த வனம் பறவைகள் சரணலாயம் என்று அழைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட பூர்வாக வரலாறை உடையதுதான் இந்த தென்னம்பாக்கம் ஸ்ரீகல்யாண வேங்கடஸே பெருமாள் திருக்கோயில்.**

**இத்திருக்கோயிலில் வருகின்ற பிப்ரவரி மாதம் 26-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீதேவி பூதேவி சமேதவாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ பெருமாளுக்கு திருக்கல்யாண மஹோத்ஸவம் நடைபெற இருக்கிறது. வேடந்தாங்கல் வழியில் அமைந்துள்ள திருமலைவய்யா ஊருக்கு அருகில் ஸ்ரீஅமிர்தபுரி - ஸ்ரீராமானுஜ யோகவனம் ஸ்தாபகர், ஸ்ரீகோவிந்த உபாஸகர் பகவான் ஸ்ரீமத் ஸ்வாமி ஸீதாராம ஸ்வாமிகள் மற்றும் குரு பத்தினி ஸ்மதி தாராமாதா அவர்களுடன் எழுந்தருளி பக்தர்களை ஆசீர்வதிக்க எழுந்தருளுக்கிறார். இந்நன்னாளில் பக்தர்கள் அனைவரும் திரளாக வந்து திருக்கல்யாண உற்சவத்தை கண்டுகளிக்குமாறு வேண்டுகிறோம்.**

| | | |
|---|---|---|
| குறிப்பு | : | பாண்டிச்சேரி To ஏம்பலம், விழுப்புரம் To ஏம்பலம், கடலூர் To ஏம்பலம் |
| பஸ் ஸ்டாப் | : | ஏம்பலம் காணாந்தோப்பு |
| கோயில் திறக்கும் நேரம் | : | காலை 6.00 மணிமுதல் மதியம் 12.00<br>மாலை 3.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை |
| தொடர்புக்கு | : | 97789 442808 84894 16530 89393 19214 |